<u>2025 ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 187 /2022</u>

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 – ஆம் தேதி புதன்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW1 நபரின் வாக்கு மூலம்

<u>(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)</u> திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – அம்மாப்பொன்னு |
| கணவர் பெயர்: | ராஜபாண்டி |
| ஊர்: | துரைராஜபுரம் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலி வேலை |
| வயது : | 49 |

<u>தேதி : 20.08.2025.</u>

<u>முதல் விசாரணை: –</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1. | 17.09.2017 ம் தேதியிட்டு பொள்ளாச்சி தாலுகா காவல்நிலைய குற்ற எண்.158/2017 பிரிவுகள் 279, 337, 304A இ.த.ச.ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.1.** |

| | |
|---|---|
| 2. | 18.09.2017 ம் தேதியிட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலிருந்து எனது மகன் ராஜேஸ்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை சான்று நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.2.** |
| 3. | எனது மகன் ராஜேஸ்குமார் 17.09.2017 ம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச் சான்று அசல் – **ம.சா.ஆ.3.** |
| 4. | TN 41 AR 4790 என்ற இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் – **ம.சா.ஆ.4.** |
| 5. | 07.11.2017 ம் தேதியிட்டு பொள்ளாச்சி தாலுகா காவல்நிலைய குற்ற எண்.158/2017 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5.** |
| 6. | எனது குடும்ப அட்டையின் ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிப்பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). – **ம.சா.ஆ.6.** |
| 7. | எனது வங்கி கணக்குப் புத்தகத்தின் ஒளிப்பதிவு நகல் – **ம.சா.ஆ.7.** |
| 8. | 2 ம் மனுதாரர் நவீன்குமார் என்பவரின் ஆதார் அட்டை ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிப்பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). – **ம.சா.ஆ.8.** |
| 9. | 3 ம் மனுதாரர் வினிதா என்பவரின் ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் ஒளிப்பதிவு நகல்கள் – **ம.சா.ஆ.9.** |
| 10. | 4 ம் மனுதாரர் பிரவீன் என்பவரின் ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் ஒளிப்பதிவு நகல்கள் – **ம.சா.ஆ.10.** |

நான் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**:–

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.20 18:29:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC). தேனி.
20.08.2025